1992 ஏப்ரல் 9]

529—

பட்டாசுத் தொழிற்சாலைகளில் விபத்துக்களைக் தடுக்க தொழிலாளர்களுக்குப் பயிற்சி.

*3551—திரு. ஜெ. பாலகங்காதரன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிவகாசி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு விபத்துக் களைத் தடுக்க உரிய பயிற்சி அளிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தற்போது தொழிற்சாலை ஆய்வாளர்களால் சிவகாசி யிலும் மற்ற இடங்களிலும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு விபத்துக்களை தடுக்கும் வகையில் உரிய பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் 6–4–1992 அன்று சிறு தொழில்கள் மூலம் உற்பத்தியாகும் பொருள்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் மத்திய சுங்க வரியிலி ருந்து விதி விலக்கு அளிக்க மத்திய அரசுக்குப் பரிந்துரை செய் வதாகக் கூறியதற்கும், தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் சிறுவர்கள் படிக்க நான்-பார்மல் எஜுகேஷன் மூலம் உதவி செய்யப்பட்டும்; பி. எஃப். தொகை ரூபாய் 2-லிருந்து 10 ஆக உயர்த்தி தொழிலாளர்களுக்கு பல நன்மைகள் புரிந்திட்ட எங்கள் இதய தெய்வத்திற்கு நன்றி கூறி (மேசையை தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தை பள்ளிகள் மூலமாக நடைமுறைப் படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குரிய பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக் கப்பட இருக்கிறதென்பதை மானியக் கோரிக்கையின்போது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதியோடு அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சிவகாசியில் கிட்டத்தட்ட 40 வெரைடீஸ் பட்டாசுகள்தான் உற்பத்தியாகின்றன. இங்கே உற்பத்தியாகும் பட்டாசுகளைப் படிப்பறிவில்லாத மக்கள்தான் தயாரிக்கிறார்கள். அவர்கள்தான் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். மேலை நாடுகள் குறிப்பாக சீனா போன்ற நாடுகள் கிட்டத் திட்ட 160 வெரைடீஸ் உற்பத்தி செய்கிறார்கள். அப்படி சிவகாசியிலும் உற்பத்தி செய்வதற்கு கெமிகல் இன்ஜினியரிங் பயிற்சியைச் சிவகாசியில் ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 530, திரு. பி. வி. இராஜேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

530—

வேளாண்மை அபிவிருத்தியில் புதிய திட்டங்கள்.

*5425—திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேளாண்மை அபிவிருத்தியில் அரசு புதிய திட்டங்கள் ஏதேனும் புகுத்த உள்ளதா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். வேளாண்மை அபிவிருத்தியில் புதிய திட்டங்களை அரசு புகுத்த இருக்கிறது.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய திட்டங்களைப் புகுத்த இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் நல்ல தகவல் தந்திருக்கிறார்கள். தற்போது நம்முடைய விஞ்ஞானிகளுடைய கண்டுபிடிப்பாக இருக்கும் செயற்கைக்கோள்கள் வானிலே பறந்து, விவசாயிகளுக்கு வேண்டிய தகவல்களைத் தந்து கொண்டிருக்கின்றன. அந்தத் தகவல்கள் எல்லாம் அண்ணா யூனிவர்சிட்டிக்குக் கிடைத்துக்கொண்டிருக்கின்றன. அது மீண்டும் கோவையிலே இருக்கும் அக்ரிகல்சுரல் யூனிவர்சிட்டிக்குச் சென்று, அங்கிருந்து விவசாயிகளை வந்து அடைய வேண்டும். அதற்கான திட்டமும் இங்கே இருக்கிறதா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.